# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,922/6 — 1970 සැප්තැම්බර් 11 වැනි සිකුරාදා — 1970.9.11

14,922/6 ம் இலக்கம் — 1970ஆண்டு ஆம் செத்தெம்பர் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## அரசாங்க அறிவித்தல்கள்

ம. தே. அ. எண் : ஒ. 487/61

மேன்மை தங்கிய மகாதேசாதிபதி அவர்கள் மாட்சிமை தங்கிய அரசியாரின் சார்பாக, மேன்மை தங்கிய கலாநிதி மொஹமட் ஹுசேன் மலயேக் பரிதானி அவர்களை இலங்கைக்கு ஈரான் அதிவிசேட, பூரணஅதிகார தூதமைச்சராகத் தத்துவமளிக்கும் சான்றோலையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

மேன்மை தங்கியாரின் ஆணைவழி,
டி. ஜீ. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 10.

9–698

---

### இலங்கைப் பிரமாண விதித்தற் சட்ட நிருபணத்தின் 171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை இலக்கம் 296

171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (1) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பகல றலகே இரத்னுயக, பதில் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர் ஆகிய நான் இக்கட்டளையால் எத்தொகையான ஈரவெங்காயத்தையும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாதெனத் தடைவிதிக்கிறேன்.

இக் கட்டளையின் பொருட்டு "யாழ்ப்பாணக் குடாநாடு" என்பது கரைச்சி துணுக்காய்ப் பிரிவின் இறைவரி உத்தியோகத்தரின் பகுதி தவிர்ந்த யாழ்ப்பாணப் பரிபாலன மாவட்டமாகும்.

பி. ஆர். இரத்னுயக,
பதில் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1970 செப்டெம்பர் 7.

9–577/1

---

### இலங்கைப் பிரமாண விதித்தற் சட்ட நிருபணத்தின் 171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை இலக்கம் 297

171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (1) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பகல றலகே இரத்னுயக, பதில் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) எத்தொகையான ஈரவெங்காயத்தையும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து யாழ்ப்பாணப் பகுதி பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் அனுமதிச் சீட்டில்லாமல் ஓர் ஆள் 7 இருத்தல் எடுத்துச் செல்வதைத் தவிர—

(அ) யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரைப்பகுதியில் கடலிலோ ஏரியிலோ ஒரு குறிப்பிட்ட முனையிலிருந்து வள்ள மூலமாகவோ பாய்க் கப்பல் மூலமாகவோ ;

(ஆ) யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து ;

(இ) பச்சிலைப்பள்ளிப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் ;

(ஈ) தென்மராட்சிப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவின் மறவன்புலவுக் கிராம அதிகாரியினதும் தனங்கிளப்புக் கிராம அதிகாரியின் பிரிவுகளிலும்,

எடுத்துச் செல்லவோ அல்லது கொண்டு செல்லவோ கூடாதெனத் தடை விதிக்கிறேன்.

இக்கட்டளையின் பொருட்டு "யாழ்ப்பாணக் குடாநாடு" என்பது கரைச்சி துணுக்காய்ப் பிரிவின் இறைவரி உத்தியோகத்தரின் பகுதி தவிர்ந்த யாழ்ப்பாண நிர்வாக மாவட்டமாகும்.

பி. ஆர். இரத்னுயக,
பதில் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1970 செப்டெம்பர் 7.

9–577/2

## இலங்கைப் பிரமாண விதித்தற் சட்ட நிருபணத்தின் 171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை இலக்கம் 298**

இலங்கைப் பிரமாண விதித்தற் சட்ட நிருபணத்தின் 171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (1) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பகல நலகே இரத்னயக, பதில் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர் ஆகிய நான் இக்கட்டளையால் நிறம் பூசப்பட்ட நெல் தானியம் கலக்கப்பட்ட எத்தொகையான நெல்லையும் இலங்கையின் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரி யால் அல்லது அவர் சார்பில் முன்னர் கூறப்பட்ட இடத்தைச் சேர்ந்த பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியால் வழங்கப்படும் அதிகாரத்துடனும் அவ்வதிகாரத்தில் அளிக்கப்படும் நிபந்தனைகளின் பேரிலும் தவிரக் கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாதெனத் தடை விதிக்கிறேன்.

மேலே கூறப்பட்டுள்ள கட்டளை பின்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்படமாட்டாது :

(அ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்வொருவரோ எத்தொகையான நெல்லைக் கொண்டு செல்ல அல்லது எடுத்துச் செல்ல அல்லது ;

(ஆ) பதிவு செய்யப்பட்ட நெல் ஆலை வைத்திருக்கும் ஒருவர் அல்லது அவர் சார்பில் அவரின் பண்டசாலைக்கோ அல்லது வியாபார நிலையத்திற்கோ கமத்தொழிற் சேவைப் பகுதியால் அவ்வாலை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட தொகையைக் கொண்டு செல்ல அல்லது எடுத்துச் செல்லல்.

இக்கட்டளையால்—

"நிறம் பூசப்பட்ட நெல் தானியம்" என்பதன் பொருள் செயற்கை முறையால் "மலட்சைட் பச்சை" அல்லது "கொச்சின் சிவப்பு" அல்லது வேறெவ்வித பொருளைக் கொண்டோ நெல்லிற்கு அளிக்கப்படின் பச்சை அல்லது சிவப்பு நிறத்தைக் கொடுக்கக்கூடிய நெல்லைக் குறிக்கும்.

"பதிவு செய்யப்பட்ட நெல் ஆலை உடையவர்" என்பதன் பொருள் தற்போதைக்குக் கமத்தொழில் சேவை ஆணையாளரால் அரசாங் கத்தின் நெல்லைப் பணத்திற்கோ வெகுமானத்திற்கோ குற்றிக் கொடுப்பதற்குப் பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

பி. ஆர். இரத்னயக,
பதில் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1970 செப்டெம்பர் 7.

9–577/3

---

## இலங்கைப் பிரமாண விதித்தற் சட்ட நிருபணத்தின் 171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை இலக்கம் 299**

171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (iv) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பகல நலகே இரத்னயக, பதில் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர் ஆகிய நான் இக்கட்டளையால் எவ்வித நெல், அரிசி, கோதுமை, கோதுமைமா அல்லது குரக்கன் முதலியவைகளை இதனோடிருக்கும் அட்டவணையின் இரண்டாம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஆளோ ஆட்களோ வழங்கும் அனுமதிப் பத்திரத் தின் பேரில் தவிர அதுவும் அவரால வழங்கப்படும் ஆஞ்ஞைகளின்படி எந்நேரத்தில், எவ்விதம், எவ்விடங்களுக்கு அவ்வரிசி நெல், கோதுமை, கோதுமைமா ஆகியவைகளை எடுத்துச் செல்லக்கூடும் என்ற நிபந்தனைகளின் பேரிலும், தவிர அட்டவணையின் முதலாம் பந்தியின் விபரிக்கப்பட்ட பொருட்களை எத்துறைமுகத்தில இருந்தோ எடுத்துச் செல்லக்கூடாதெனத் தடைவிதிக்கிறேன்.

கொழும்பு,
1970 செப்டெம்பர் 7.

பி. ஆர். இரத்னயக,
பதில் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர்.

### அட்டவணை

| பத்தி 1<br>துறைமுகம் அல்லது இடம் | பத்தி 2<br>அனுமதிப் பத்திரம் வழங்கக்கூடியவர்கள் |
|---|---|
| கொழும்பு .. | .. உணவுக் கட்டுப்பாட்டதிகாரி |
| காலி .. | .. காலி மாவட்ட அரசாங்க அதிபர், காலி மாவட்டப் பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி |
| யாழ்ப்பாணம், காங்கேசன்துறை பருத்தித்துறை, ஊர்காவற் றுறை, வல்வெட்டித்துறை | யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டப் பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி |
| திருகோணமலை .. | .. திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், திருகோணமலை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி |
| தலைமன்னார், மன்னார் .. | .. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மன்னார் மாவட்டப் பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி |
| மட்டக்களப்பு .. | .. மட்டக்களப்பு அரசாங்க அதிபர், மட்டக்களப்புப் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி |
| பேருவலை, களுத்துறை .. | .. களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபர், களுத்துறை மாவட்டப் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி |
| முல்லைத்தீவு .. | .. வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், வவுனியா மாவட்டப் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி |
| புத்தளம், கல்பிட்டி .. | .. புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர், புத்தளம் மாவட்டப் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி |
| நீர்கொழும்பு .. | .. கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர், கொழும்பு மாவட்டப் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி |

9–577/4

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.